# பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 15

முன்னுரை 17

1 சூனியம் என்றால் என்ன? 19

1. ஷைத்தானின் நெருக்கத்தைப் பெறுவதற்காக சூனியக்காரர்கள் செய்யும் சில காரியங்கள் 20

2 குர்ஆன், ஸுன்னாவின் பார்வையில் சூனியம் 22

1. ஜின்கள் குறித்து இறக்கப்பட்டுள்ள குர்ஆன் வசனங்கள் 22

2. ஜின்கள் குறித்த நபிமொழிகள் 23

3. சூனியம் குறித்து இறக்கப்பட்டுள்ள குர்ஆன் வசனங்கள் 27

4. சூனியம் குறித்த நபிமொழிகள் 30

5. சூனியம் குறித்த அறிஞர்களின் கருத்துகள் 35

3 சூனியக்காரன் ஜின்களை எவ்வாறு வரவழைக்கிறான்? 39

1. சூனியக்காரனின் சடங்குகள் 41

2. சூனியக்காரர்களின் அடையாளங்கள் 43

4 சூனியம் குறித்த மார்க்கத் தீர்ப்புகள் 45

• சூனியக்காரனுக்கு இஸ்லாம் வழங்கும் தண்டனை 45

1. சூனியத்தைக் கற்றுக்கொள்ளலாமா? 47

2. சூனியத்தை முறிக்க ஓதிப்பார்த்தல் 48

5 பிரிவினை ஏற்படுத்தும் சூனியம் 51

1. பிரிவினை சூனியத்தின் அடையாளங்கள் 53

2. இந்தச் சூனியம் எவ்வாறு செய்யப்படுகிறது? 53

3. இதற்கான சிகிச்சை 53

4. குணமடைந்தவருக்கான அறிவுரைகள் 67

5. எனது அனுபவங்கள் 67

6 அதீத அன்பை ஏற்படுத்தும் சூனியம் 74
• இவ்வகையான சூனியத்தின் அடையாளங்கள் 74
• இதனால் ஏற்படும் எதிர்விளைவுகள் 74
1. இதற்கான காரணங்கள் 75
2. இதற்கான சிகிச்சை 75
3. ஓர் உதாரணம் 78
7 பிரமையூட்டும் சூனியம் 79
1. இவ்வகையான சூனியத்தின் அடையாளங்கள் 80
2. இதனை எவ்வாறு முறிப்பது? 80
8 பைத்தியம் ஏற்படுத்தும் சூனியம் 81
1. பைத்தியம் உண்டாக்கும் சூனியத்தின் அடையாளங்கள் 82
2. இதற்கான சிகிச்சை 82
3. 'ருகையா'வின் வசனங்கள் 82
4. உதாரணம் 83
5. யாரோ அழைப்பது போன்ற உணர்வு 84
9 நோயை உண்டாக்கும் சூனியம் 85
• இதன் அடையாளங்கள் 85
10 சூனியத்தைவிட்டுக் காத்துக்கொள்ள அறிவுரைகள் 87

# 1

## சூனியம் என்றால் என்ன?

❀

சூனியம் என்பதற்கு அறபியில் 'சிஹ்ர்' என்று கூறப்படும். அறபியில் சிஹ்ர் என்ற வார்த்தை பல்வேறு பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது.

இமாம் அஸ்கரீ கூறுகிறார்: 'சிஹ்ர் என்பது ஒரு பொருளை அதன் உண்மை நிலையிலிருந்து திருப்புவதாகும்.'

அல்லைஸ் ﵀ கூறுகிறார்: 'ஷைத்தானின் நெருக்கத்தைப் பெறுவதற்காகச் செய்யப்படும் காரியங்களுக்கு 'சிஹ்ர்' எனப்படும்.'

இப்னு ஃபாரிஸ் ﵀ கூறுகிறார்: 'சிஹ்ர் என்பது அசத்தியத்தை சத்தியமாகக் காட்டுவதாகும்.'

இப்னு குதாமா ﵀ கூறுகிறார்: 'சிஹ்ர் என்பது மந்திரமாகும். இந்த மந்திரங்களை ஓதுவதின் மூலமோ எழுதுவதின் மூலமோ மனித உடலிலோ உள்ளத்திலோ அறிவிலோ சூனியக்காரன் மறைமுகமாகப் பாதிப்பை ஏற்படுத்துகிறான். இதன் மூலம் கொலை செய்தல், நோய்வாய்ப்படுத்துதல், கணவன் மனைவிக்கிடையே பிரிவினை ஏற்படுத்துதல் போன்ற காரியங்களில் சூனியக்காரர்கள் ஈடுபடுகிறார்கள்.'

இமாம் இப்னுல் கய்யிம்[1] ﵀ கூறுகிறார்: 'சிஹ்ர் என்பது கெட்ட ஆன்மாக்களின் பாதிப்பினால் உண்டாக்கப்படுவதாகும். இதனால் மனிதன் பாதிக்கப்படுகிறான்.'

---

1 இப்னுல் கய்யிம்: முஹம்மது இப்னு அபூபக்ர் என்பது இயற்பெயர். ஹிஜ்ரீ 691 (கி.பி. 1292) ஸஃபர் 7 அன்று டமாஸ்கஸில் பிறப்பு. ஏழு வயதிலிருந்தே அறிஞர்களின் சபைகளில் கல்வி தேடி அமர்ந்தார்கள். மார்க்க அறிஞராகிய தம் தந்தையிடமும், அக்காலத்தில் கல்விக்குப் பேர்போன சுமார் இருபத்தைந்து அறிஞர்களிடமும் கற்றார்கள். ஹிஜ்ரீ 712 (கி.பி. 1312)இல் இமாம் இப்னு

சூனியம் குறித்து கூறப்பட்டுள்ள வசனங்கள் குர்ஆனில் ஏராளமாகக் காணப்படுகின்றன.

## 4. சூனியம் குறித்த நபிமொழிகள்

அன்னை ஆயிஷா ﵂ அறிவிக்கிறார்:

عَائِشَـةَ، رَضِيَ اللَّهُ عَنْهَا قَالَتْ سَحَرَ رَسُـولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ رَجُلٌ مِنْ بَنِي زُرَيْقٍ، يُقَـالُ لَهُ لَبِيدُ بْنُ الأَعْصَمِ، حَتَّى كَانَ رَسُـولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَـلَّمَ يُخَيَّـلُ إِلَيْهِ أَنَّهُ كَانَ يَفْعَلُ الشَّيْءَ وَمَا فَعَلَهُ، حَتَّى إِذَا كَانَ ذَاتَ يَوْمٍ أَوْ ذَاتَ لَيْلَةٍ وَهُوَ عِنْدِي، لَكِنَّهُ دَعَا وَدَعَا، ثُمَّ قَالَ يَا عَائِشَـةُ أَشَعَرْتِ أَنَّ اللَّهَ أَفْتَانِي فِيمَا اسْتَفْتَيْتُهُ فِيهِ، أَتَانِي رَجُلاَنِ، فَقَعَدَ أَحَدُهُمَا عِنْدَ رَأْسِي، وَالآخَـرُ عِنْـدَ رِجْلَيَّ، فَقَالَ أَحَدُهُمَا لِصَاحِبِهِ: مَا وَجَـعُ الرَّجُلِ فَقَالَ مَطْبُوبٌ قَالَ مَنْ طَبَّهُ قَالَ لَبِيدُ بْنُ الأَعْصَمِ، قَالَ: فِي أَيِّ شَيْءٍ قَالَ فِي مُشْطٍ وَمُشَاطَةٍ، وَجُفِّ طَلْعِ نَخْلَةٍ ذَكَرٍ قَالَ وَأَيْنَ هُوَ قَالَ فِي بِئْرِ ذَرْوَانَ فَأَتَاهَا رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فِي نَاسٍ مِنْ أَصْحَابِهِ، فَجَاءَ فَقَالَ يَا عَائِشَةُ كَأَنَّ مَاءَهَا نُقَاعَةُ الحِنَّاءِ أَوْ كَأَنَّ رُءُوسَ نَخْلِهَا رُءُوسُ الشَّيَاطِينِ قُلْتُ يَا رَسُولَ اللَّهِ أَفَلاَ اسْتَخْرَجْتَهُ قَالَ قَدْ عَافَانِي اللَّهُ فَكَرِهْتُ أَنْ أُثَوِّرَ عَلَى النَّاسِ فِيهِ شَرًّا فَأَمَرَ بِهَا فَدُفِنَتْ

‘நபியவர்களுக்கு பனூ சுரைக் குலத்தைச் சேர்ந்த லபீது இப்னு அஃஸம் என்பவன் சூனியம் செய்தான். இதையடுத்து நபியவர்கள் தாம் செய்திராத ஒன்றைத் தாம் செய்துகொண்டிருந்ததாகப் பிரமையூட்டப்பட்டார்கள். இறுதியில் அவர்கள் ஒரு நாள் அல்லது ஓர் இரவு என்னிடம் வந்தார்கள். ஆயினும் என்மீது கவனம் செலுத்தாமல் தொடர்ந்து பிரார்த்தனை செய்துகொண்டிருந்தார்கள். பிறகு என்னிடம் கூறினார்கள், ‘ஆயிஷாவே, விசயம் தெரியுமா? எந்த விசயத்தில் தெளிவைத் தரும்படி அல்லாஹ்விடம் நான் கேட்டுக்கொண்டிருந்தேனோ அந்த விசயத்தில் அவன் எனக்குத் தெளிவை அளித்துவிட்டான். கனவில் என்னிடம் இரண்டு வானவர்கள் வந்தார்கள். அவர்களில் ஒருவர் என்

---

﵂ அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான இவர்கள், இராக்கிலுள்ள பஸ்ரா நகருக்குக் குடிபெயர்ந்ததால் பஸ்ராவாசி (அல்பஸரீ) என அறியப்படுகிறார்கள். உபை இப்னு கஅப், உஸாமா இப்னு ஸைது, அனஸ் இப்னு மாலிக் ﵃ ஆகிய நபித்தோழர்களிடமிருந்து ஹதீஸ்களை அறிவித்துள்ளார்கள். ஹிஜ்ரீ 110 (கி.பி. 728) ரஜப் மாதத்தில் தமது 89ஆம் வயதில் மரணித்தார்கள்.

# 3

## சூனியக்காரன் ஜின்களை எவ்வாறு வரவழைக்கிறான்?

❀

சூனியக்காரன் ஷைத்தான்களின் உதவியைப் பெறுவதற்காக நிராகரிப்பான, கீழ்த்தரமான சில காரியங்களில் ஈடுபடுகிறான். சூனியக்காரனின் இந்தக் காரியங்களுக்குப் பகரமாகத்தான் ஷைத்தான் அவனுக்கு உதவிபுரிகிறான். இதுதான் சூனியக்காரனுக்கும் ஷைத்தானுக்கும் இடையே நடைபெறுகின்ற ஒப்பந்தம். இந்த ஒப்பந்தம் ஜின்களுடைய தலைவர்களின் முன்னிலையில்தான் நடைபெறுகிறது. குறிப்பிட்ட ஷைத்தானை சூனியக்காரனுக்குக் கீழ்ப்படியுமாறு அந்தத் தலைவர் ஏவுகிறார். அந்த ஷைத்தானின் துணையால் சூனியக்காரன் தான் விரும்பும் செயல்களைச் செய்கிறான்.

ஷைத்தான் சூனியக்காரனுக்குக் கீழ்ப்படிய மறுத்தால் அந்த ஷைத்தான் எந்தப் பிரிவைச் சேர்ந்திருக்கிறானோ அந்தப் பிரிவைச் சேர்ந்த ஜின்களின் தலைவரிடம் சூனியக்காரன் முறையிடுகிறான். குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த ஜின்களின் தலைவரை அவன் அழைப்பதற்காக சில மந்திரங்களை உச்சரிக்கிறான். அந்த தலைவர் சூனியக்காரனுக்குக் கீழ்ப்படியுமாறு மீண்டும் ஷைத்தானை ஏவுவார். தவறும் பட்சத்தில் தண்டனை உண்டு எனவும் எச்சரிப்பார். எனவேதான் சில ஜின்கள் வெறுத்தபோதிலும் சூனியக்காரனுக்குக் கட்டுப்படுகின்றன. இதனால்தான் ஜின்கள் சூனியக்காரர்களைத் துன்புறுத்துகின்றன; அவனை நிம்மதியாக இருக்க விடுவதில்லை. நிரந்தரமான தலைவலி, இரவில் தூக்கமின்றி தவித்தல், பதற்றம் அதிகமாகுதல் ஆகிய பிரச்சினைகளால் சூனியக்காரன் பாதிக்கப்படுகிறான். மிகவும் கீழ்த்தரமான சூனியக்காரர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதில்லை. அவனது மனைவியின் கருவறையிலேயே அந்த ஜின் கருவைச் சிதைத்துவிடுகிறது.

# 4

# சூனியம் குறித்த மார்க்கத் தீர்ப்புகள்

❀

## சூனியக்காரனுக்கு இஸ்லாம் வழங்கும் தண்டனை

இமாம் மாலிக்[7] ﵀ கூறுகிறார்: 'தனது வேதத்தில் சூனியக்காரர்களைக் குறித்துதான் அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

وَلَقَدْ عَلِمُوا لَمَنِ اشْتَرَاهُ مَا لَهُ فِي الْآخِرَةِ مِنْ خَلَاقٍ

'இதனை விலைக்கு வாங்கிக் கொண்டவனுக்கு மறுமையில் எவ்விதப் பாக்கியமும் இல்லை என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள்.' (குர்ஆன் 2:102) சூனியம் செய்யக்கூடிய சூனியக்காரன் கொல்லப்பட வேண்டும் என்பதே எனது கருத்து.'

இப்னு குதாமா ﵀ கூறுகிறார்: 'சூனியக்காரனுக்கு இஸ்லாம் வழங்கும் தண்டனை கொலையாகும்.'

குர்துபீ ﵀ கூறுகிறார்: 'சூனியக்காரனுக்கு வழங்கப்படும் தண்டனையில் சட்டநிபுணர்கள் கருத்துவேறுபாடு கொண்டுள்ளார்கள். சூனியக்காரன் கொல்லப்பட வேண்டும்; அவனது பாவமன்னிப்பு ஏற்றுக்கொள்ளப்படாது என்பது இமாம் மாலிக்கின் கருத்தாகும். ஏனெனில், அல்லாஹ் சூனியத்தை நிராகரிப்பு என்றே கூறுகிறான். 'அந்த வானவர்கள் எவருக்கேனும் இந்தக் கலையைக் கற்றுக் கொடுக்க நேர்ந்தால்

---

7 இமாம் மாலிக் இப்னு அனஸ் இப்னு மாலிக் இப்னு அபூஆமிர் ﵀, ஹிஜ்ரீ 94 (கி.பி. 717)இல் மதீனாவில் பிறந்தார்கள். முப்பாட்டனார் அபூஆமிர் ﵁ மூத்த நபித்தோழர். இமாமவர்கள் மதீனா அறிஞர்களான இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரீ, அப்துல்லாஹ் இப்னு உமர் ﵄ அவர்களால் விடுவிக்கப்பட்ட அடிமை நாஃபிஃ ﵀ ஆகியோரிடம் ஹதீஸ்களைக் கற்றார்கள். இவர்கள் தொகுத்த 'முவத்தா' எனும் ஹதீஸ் தொகுப்பு மிகவும் பிரசித்தி பெற்றது. இமாம் ஷாஃபிஈ ﵀ இவர்களின் மாணவர். ஹிஜ்ரீ 179 ரபீஉல் அவ்வல் 14இல் தம் 85ஆம் வயதில் மதீனாவில் மரணித்தார்கள்.

## 1. பிரிவினை சூனியத்தின் அடையாளங்கள்

இந்த வகையான சூனியத்தால் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதற்கான அடையாளங்கள்:

1. அன்பு திடீரென்று வெறுப்பாக மாறுதல்
2. இருவருக்கும் இடையே அதிகமாகச் சந்தேகங்கள் தோன்றுதல்
3. தவறுகளுக்குக் காரணம் தேடாமலிருத்தல்
4. அற்ப விசயங்களுக்குக்கூட பெரும் பிரச்சினை மூளுதல்
5. கணவனின் கண்களுக்கு மனைவியோ அல்லது மனைவியின் கண்களுக்கு கணவனோ தலைகீழாகத் தெரிதல். அழகாக இருக்கும் மனைவி கணவனின் கண்களுக்கு அசிங்கமாகத் தெரிதல்.
6. இருவரில் மற்றவர் செய்யும் அனைத்துக் காரியங்களையும் வெறுத்தல்
7. வீட்டிற்கு வெளியே நிம்மதியாக இருக்கும் கணவனோ மனைவியோ வீட்டிற்குள் நுழைந்தவுடன் மனஇறுக்கத்தை உணர்தல்

## 2. இந்தச் சூனியம் எவ்வாறு செய்யப்படுகிறது?

சூனியம் செய்ய விரும்பும் ஒருவன் சூனியக்காரனிடம் சென்று குறிப்பிட்ட இருவருக்கிடையே சூனியம் செய்யுமாறு கூறுகிறான். சூனியக்காரன் அவனிடம் குறிப்பிட்ட மனிதரின் பெயரையும் அவனது தாயாரின் பெயரையும் கேட்கிறான். அந்தக் குறிப்பிட்ட மனிதன் பயன்படுத்திய பொருள்கள் ஏதேனும், உதாரணமாக சட்டை, கைக்குட்டை, முடி போன்றவற்றை வேண்டுகிறான். அது கிடைக்கவில்லையெனில் குறிப்பிட்ட மனிதன் செல்லும் பாதையில் சூனியம் செய்யப்பட்ட பொருளைப் போட்டுவிடுகிறான். அவன் அதனை மிதித்துவிட்டால் சூனியத்தின் பாதிப்பிற்கு ஆளாகி விடுகிறான். இல்லையெனில் அவன் சாப்பிடும் உணவிலோ அருந்தும் நீரிலோ கலந்துவிடுகிறான்.

## 3. இதற்கான சிகிச்சை

சிகிச்சை மூன்று நிலைகளில் செய்யப்படுகிறது.

# 6

# அதீத அன்பை ஏற்படுத்தும் சூனியம்

❀

## இவ்வகையான சூனியத்தின் அடையாளங்கள்

1. அளவுக்கு மீறி அதீத அன்பு
2. உடலுறவின்மீது தீராத நாட்டம்
3. அவளைப் பார்க்க துடியாய்த் துடித்தல்
4. குருட்டுத்தனமாக அவளுக்குக் கட்டுப்படுதல்

இது எதனால், எவ்வாறு செய்யப்படுகிறது?

கணவன் மனைவிக்கிடையே ஏராளமான பிரச்சினைகள் ஏற்படத் தான் செய்யும். ஆயினும் விரைவில் இயல்புநிலை திரும்பிவிடும். இந்த இயல்பைப் புரிந்துகொள்ளாத பெண்கள் சூனியக்காரர்களிடம் சென்று இதற்கான தீர்வை வேண்டுகிறார்கள். சூனியக்காரன் அதீத அன்பை ஏற்படுத்தும் சூனியத்தை வைத்துவிடுகிறான். இது முழுக்கமுழுக்க தடைசெய்யப்பட்ட ஒன்றாகும். சூனியக்காரன் அவளிடம், கணவனின் வியர்வை பட்ட பொருள்களை வேண்டு கிறான். அதில் சில மந்திரங்களை ஓதி அதனை வெற்றிடத்தில் புதைத்துவிடுகிறான் அல்லது உணவிலோ பானத்திலோ கலந்து விடுமாறு கூறுகிறான்.

## இதனால் ஏற்படும் எதிர்விளைவுகள்

1. சிலசமயங்களில் இதனால் கணவன் நோய்வாய்ப்பட்டு விடலாம். இதன் காரணமாக மூன்று வருடங்கள் நோய்வாய்ப்பட்ட மனிதரை நான் அறிவேன்.
2. சிலசமயங்களில் சூனியம் எதிர்விளைவுகளை ஏற்படுத்திவிட லாம். அதாவது, அதீத அன்பிற்குப் பதிலாக வெறுப்பை ஏற்படுத்திவிடலாம்.

# 7

## பிரமையூட்டும் சூனியம்

❀

அல்லாஹ் கூறுகிறான்:

قَالُوا يَا مُوسَى إِمَّا أَنْ تُلْقِيَ وَإِمَّا أَنْ نَكُونَ نَحْنُ الْمُلْقِينَ قَالَ أَلْقُوا فَلَمَّا أَلْقَوْا سَحَرُوا أَعْيُنَ النَّاسِ وَاسْتَرْهَبُوهُمْ وَجَاءُوا بِسِحْرٍ عَظِيمٍ وَأَوْحَيْنَا إِلَى مُوسَى أَنْ أَلْقِ عَصَاكَ فَإِذَا هِيَ تَلْقَفُ مَا يَأْفِكُونَ فَوَقَعَ الْحَقُّ وَبَطَلَ مَا كَانُوا يَعْمَلُونَ فَغُلِبُوا هُنَالِكَ وَانْقَلَبُوا صَاغِرِينَ وَأُلْقِيَ السَّحَرَةُ سَاجِدِينَ قَالُوا آمَنَّا بِرَبِّ الْعَالَمِينَ رَبِّ مُوسَى وَهَارُونَ

மூஸாவே, 'நீர் போடுகிறீரா அல்லது நாங்கள் போடட்டுமா' என்று சூனியக்காரர்கள் கேட்டார்கள். 'நீங்களே போடுங்கள்' என்று அவர் கூறினார். அவர்கள் போட்டபோது மக்களின் கண்களை மயக்கி மருளச் செய்துவிட்டார்கள். பெரும் சூனியத்தை அவர்கள் செய்து காட்டினார்கள். 'உமது கைத்தடியைப் போடும்' என்று நாம் மூஸாவிற்கு கட்டளையிட்டோம். உடனே அது அவர்களது சூனியங்கள் அனைத்தையும் விழுங்கிவிட்டது. அவர்கள் செய்துகொண்டிருந்தவை அனைத்தும் வீணாகி, சத்தியம் வெளிப்பட்டுவிட்டது. அங்கேயே அவர்கள் தோற்று இழிவடைந்துவிட்டார்கள். சூனியக்காரர்கள் சிரம்பணிந்தவர்களாக, 'அகிலங்களின் இறைவனின்மீது நாங்கள் நம்பிக்கை கொண்டோம். அவனே மூஸா மற்றும் ஹாரூனின் இறைவனாவான்' என்று கூறினார்கள். (குர்ஆன் 7:115–122)

قَالُوا يَا مُوسَى إِمَّا أَنْ تُلْقِيَ وَإِمَّا أَنْ نَكُونَ أَوَّلَ مَنْ أَلْقَى قَالَ بَلْ أَلْقُوا فَإِذَا حِبَالُهُمْ وَعِصِيُّهُمْ يُخَيَّلُ إِلَيْهِ مِنْ سِحْرِهِمْ أَنَّهَا تَسْعَى

'மூஸாவே, நீர் போடுகிறீரா அல்லது நாங்கள் முதலில் போடட்டுமா?' என்று சூனியக்காரர்கள் கேட்டார்கள். அதற்கு அவர், 'நீங்களே முதலில் போடுங்கள்' என்றார். உடனே அவர்களின்

# 8

## பைத்தியம் ஏற்படுத்தும் சூனியம்

❀

خَارِجَةَ بْنِ الصَّلْتِ التَّمِيمِيِّ عَنْ عَمِّهِ، أَنَّهُ أَتَى رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَأَسْلَمَ ثُمَّ أَقْبَلَ رَاجِعًا مِنْ عِنْدِهِ فَمَرَّ عَلَى قَوْمٍ عِنْدَهُمْ رَجُلٌ مَجْنُونٌ مُوثَقٌ بِالْحَدِيدِ فَقَالَ أَهْلُهُ إِنَّا حُدِّثْنَا أَنَّ صَاحِبَكُمْ هَذَا قَدْ جَاءَ بِخَيْرٍ فَهَلْ عِنْدَكَ شَيْءٌ تُدَاوِيهِ فَرَقَيْتُهُ بِفَاتِحَةِ الْكِتَابِ فَبَرَأَ، فَأَعْطَوْنِي مِائَةَ شَاةٍ فَأَتَيْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَأَخْبَرْتُهُ، فَقَالَ: هَلْ إِلَّا هَذَا وَقَالَ مُسَدَّدٌ فِي مَوْضِعٍ آخَرَ هَلْ قُلْتَ غَيْرَ هَذَا قُلْتُ لَا قَالَ خُذْهَا فَلَعَمْرِي لَمَنْ أَكَلَ بِرُقْيَةِ بَاطِلٍ لَقَدْ أَكَلْتَ بِرُقْيَةِ حَقٍّ

ஹாரிஜா இப்னு சுல்த் தனது சிறிய தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்: 'அவர் நபியவர்களிடம் வந்து இஸ்லாமை ஏற்றுக்கொண்டார். பிறகு தம் சமூகத்தை நோக்கி திரும்பிச் சென்றார். அவர் வழியில் ஒரு சமூகத்தைக் கடந்து செல்ல நேரிட்டது. அவர்கள் பைத்தியம் பிடித்த ஒரு மனிதரைச் சங்கிலியால் கட்டி வைத்திருந்தார்கள். அவர்கள் இவரிடம், 'உங்களுடைய தோழர் நன்மையான விசயங்களைக் கொண்டு வந்துள்ளார்' என்று நாங்கள் கேள்விப்பட்டுள்ளோம். இந்த மனிதருக்குச் சிகிச்சை செய்ய உங்களிடம் ஏதாவது இருக்கிறதா' என்று கேட்டார்கள். அவர் கூறுகிறார்: 'நான் ஃபாத்திஹா எனும் அத்தியாயத்தைக் கொண்டு அவருக்கு ஓதிப் பார்த்தேன். அவர் குணமாகிவிட்டார். எனவே, அவர்கள் எனக்கு நூறு ஆடுகளைத் தந்தார்கள். நான் நபியவர்களிடம் வந்து இந்தச் செய்தியை அறிவித்தேன். நபியவர்கள், 'இதைத் தவிர வேறு ஏதேனும் கூறினீரா' என்று கேட்டார்கள். நான், 'இல்லை' என்று கூறினேன். அதற்கு அவர்கள், 'இதை நீர் எடுத்துக்கொள்ளும். (என் ஆயுளின்மீது) உறுதியாக, சிலர் தவறான (அசத்தியமான) ஓதிப்பார்த்தலைக்கொண்டு சாப்பிடுகிறார்கள். நிச்சயமாக நீர் உண்மையான ஓதிப்பார்த்தலைக் கொண்டு

# 9

# நோயை உண்டாக்கும் சூனியம்

❀

## இதன் அடையாளங்கள்

1. உடலின் ஏதேனும் ஒரு பகுதியில் தொடர்ந்து வலி இருந்து கொண்டேயிருத்தல்
2. அடிக்கடி வலிப்பு ஏற்படுதல்
3. உறுப்புகளில் ஏதேனும் ஒன்று சிதைந்துவிடுதல்

உடல்ரீதியான நோய்களுக்கும் சூனியத்தினால் உண்டாகும் நோய்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் இதுதான்: 'ஓதிப் பார்க்கும்போது உடல்நடுக்கமோ தலைவலியோ அல்லது நாம் மேலே குறிப்பிட்ட அடையாளங்களில் ஏதேனும் ஒன்றோ வெளிப்பட்டால் அது சூனியத்தினால் உண்டாகும் நோயாகும். இல்லையெனில், அது டாக்டர்களிடம் சென்று சிகிச்சை எடுக்கப்பட வேண்டிய உடல்ரீதியான நோயாகும்.'

இதற்கும் நாம் ஆரம்பத்தில் கூறிய அதே சிகிச்சை முறைகளையே கடைப்பிடியுங்கள். அவற்றோடு பின்வரும் பிரார்த்தனைகளையும் இணைத்துக் கொள்ளுங்கள்:

بِسْمِ اللَّهِ أَرْقِيكَ مِنْ كُلِّ دَاءٍ يُؤْذِيكَ مِنْ كُلِّ حَاسِدٍ إِذَا حَسَدَ وَمِنْ كُلِّ عَيْنٍ وَاسْمُ اللَّهِ يَشْفِيكَ

அல்லாஹ்வின் பெயரால் உமக்கு ஓதிப்பார்க்கிறேன். உமக்குத் துன்பமளிக்கும் ஒவ்வொன்றையும் விட்டும் பொறாமைக்காரனின் பொறாமையை விட்டும் கண்ணேற்றை விட்டும் அல்லாஹ் உமக்கு நிவாரணமளிக்கட்டும். (அறிவிப்பு: உபாதா இப்னுஸ் ஸாமித் ؓ, முஸன்னஃப் இப்னி அபீ ஷீபா 23573)

# 10

## சூனியத்தைவிட்டுக் காத்துக்கொள்ள அறிவுரைகள்



சூனியத்திலிருந்து உங்களைக் காத்துக்கொள்ள பொதுவான சில அறிவுரைகள் பின்வருமாறு:

1. ஏழு அஜ்வா ரக பேரீச்சம்பழங்களை தினமும் உண்டுவந்தால் சூனியப் பாதிப்பு ஏற்படாது.

   مَنْ تَصَبَّحَ كُلَّ يَوْمٍ سَبْعَ تَمَرَاتٍ عَجْوَةً لَمْ يَضُرَّهُ فِي ذَلِكَ اليَوْمِ سُمٌّ وَلاَ سِحْرٌ

   'தினமும் காலையில் ஏழு அஜ்வா ரகப் பேரீச்சம் பழங்களை சாப்பிடுகிறவருக்கு எந்த விஷமும், சூனியமும் அன்று இரவு வரை இடரளிக்காது.' (அறிவிப்பு: சஅது ﷺ, புகாரீ 5445)

2. வுளூவுடன் இருக்கும் முஸ்லிமிற்கும் சூனியப் பாதிப்பு ஏற் படாது. வுளூவுடன் இருக்கும் முஸ்லிம் வானவர்களால் பாது காக்கப்படுகிறார்.

3. தொழுகையை முறையாக ஜமாஅத்தோடு கடைப்பிடிப்பவர் ஷைத்தானை விட்டுப் பாதுகாப்படுகிறார்.

4. கழிப்பறைக்குள் நுழையும்போது ஷைத்தானிடமிருந்து அல் லாஹ்விடம் பாதுகாவல் கோரிக்கொள்ளுங்கள். ஏனெனில், கழிவறைகள் ஷைத்தான்களின் குடியிருப்புகளில் ஒன்றாகும்.

5. உங்களின் மணவாழ்வை தொழுகையைக் கொண்டும் பிரார்த் தனையைக் கொண்டும் தொடங்குங்கள்.

6. உடலுறவு கொள்ளும்போது ஷைத்தானிடமிருந்து அல்லாஹ் விடம் பாதுகாவல் தேடிக்கொள்ளுங்கள். நபியவர்கள் கற்றுத்தந்த பிரார்த்தனையை ஓதிக்கொள்ளுங்கள்.